★ விலை ரூபா 1:00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர்25 ஆவணி 6 ஜுலகஃ 12 இதழ் 190
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 22—8—83

## கிளிநொச்சி பட்டணசபை மண்டபத்தில் அரச அதிபர் அலுவலகம்?
### திணைக்கள கிளைகள் தலைமைக் காரியாலயங்களாக இயங்கும்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியைத் தனிநிர்வாக மாவட்டமாக்குவதென்ற அமைச்சரவைத் தீர்மானத்தைத் தொடர்ந்து அதிகாரிகள் குழுவொன்று கிளிநொச்சிக்கு வருகை தந்தது.

நிரந்தரமான மாவட்ட அரசாங்க செயலகம் நிறுவப்படும் வரை இப்போது மாவட்ட சபை உப அலுவலகம் இயங்கும் பட்டணசபை மண்டபத்தில் அரசாங்க அதிபரின் காரியாலயத்தை ஆரம்பிப்பதெனவும் தற்போதுள்ள திணைக்களக்கட்டிடங்களிலே அவ்வத் திணைக்களத் தலைமை நிலையங்களை நிறுவுவதெனவும் இவ்அதிகாரிகள் ஆலோசித்ததாகவும் தெரியவருகிறது.

நிரந்தரக் கட்டிடம் நிறுவும் வரை இது ஒரு தற்காலிக ஏற்பாடாக இருக்கும் எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு)

### செய்தித் தணிக்கை

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

# "கூட்டணி எம். பி.க்கள் பதவிகளை இழக்கத் தயார்

## பாராளுமன்றம் செல்வதில்லை; அரசுடன் பேசவும் ஒன்றுமில்லை"

### பி. ரி. ஐ. செய்தி நிறுவனத்திற்கு 'அமிர்' பேட்டி

(சென்னை)

**"தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனி மேல் பாராளுமன்றம் செல்லமாட்டார்கள். அவர்கள் தமது பாராளுமன்ற அங்கத்துவத்தை இழக்கத் தயாராக உள்ளனர்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.**

திரு. அ. அமிர்தலிங்கம் இந்திய பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்துக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்ததாவது: "இலங்கை பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்களின் எண்ணிக்கை 16 ஆகும். இவர்கள் தமது கொள்கையிலிருந்து ஒரு போதும் விலகமாட்டார்கள்.

"பாராளுமன்றத்துக்கு இனி மேல் செல்லப்போவதில்லை என்று தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி.க்கள் தீர்மானித்துள்ளார்கள். இதனால் அரசியல் அமைப்பின் புதிய ஆறுவது திருத்தச்சட்டத்துக்கமைய தமது பதவியை இழக்கவும் அவர்கள் தயாராகவுள்ளார்கள். எக்காரணம் கொண்டும் அச்சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

"எம்மைப் பொறுத்தவரை அரசுடன் பேசுவதற்கு எதுவுமில்லை. ஜனாதிபதி ஜயவர்த்தனவே பேச்சுக்கள் நடத்துவதுபற்றித் தீர்மானிக்க வேண்டும்.

"இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த கலவரங்களில் பாதுகாப்புப்படையினரும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். இதனை ஜனாதிபதி ஜயவர்த்தனவும் ஒப்புக்கொண்டுள்ளார்" என்றார்.

இராமேஸ்வரம் தலைமன்னார் கப்பல்சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி இந்திய அரசைத்தாம் கேட்டுள்ளதாகவும் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (கி)

### அகதிகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்திலும் அயல் கிராமங்களிலுமுள்ள பொது மக்கள் அகதிகளுக்கு உதவும் வண்ணம் ஆறுயிரத்து எழுநூறு ரூபாவை மல்லாகம் கிராம அபிவிருத்திசங்கத்திடம் வழங்கியுள்ளனர்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தலைவர் திரு. ஐ.

(6-ம் பக்கம் பார்க்க)

பாதிக்கப்பட்ட
## கல்விதிணைக்களஊழியருக்கு மூன்றுமாதச் சம்பளம்!

[கல்வியங்காடு]

நாட்டின் நிலவரங்களினால் பாதிப்புற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த கல்வித்திணைக்களத்துச் சகல ஊழியர்களுக்கும் வடமாநில கல்வித்திணைக்களத்தில் மூன்றுமாத அடிப்படைச் சம்பளம் வழங்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனையமாகாணங்களில் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளிலும், திணைக்கள காரியாலயங்களிலும், ஆசிரியர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் ஏனைய ஊழியர்களாகவும் கடமை புரிந்து வந்தவர்கள் நாட்டில்ஏற்பட்ட நிலைமைகளினால்பாதிப்புற்றுயாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளவர்களின் தற்காலிக நிவாரணத்துக்காக யாழ், கல்வித் திணைக்களம் மூன்றுமாத அடிப்படைச் சம்பளத்தை அவர்களுக்கு வழங்கி வருகிறது. கல்வித்திணைக்கள சகல ஊழியர்களுமாக இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இவ்வுதவியை பெற விண்ணப்பித்துள்ளனர்.

இன்னமும் விண்ணப்பம் செய்ய ஊழியர்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. யாழ். கல்வி அதிபதி திரு, எம்;சிமியாம்பிள்ளையும், திணைக்கல கணக்காய்வாளர் திரு. எம். யோசேப்பும் எடுத்த நடவடிக்கையின் பேரில் துரிதமாக இவ்வுதவி வழங்கப்படுகிறது. காசோலையாக வழங்கினால் சிரமம் ஏற்படும் என்பதால் பாதிப்புற்ற ஊழியர்களுக்கு பணமாகவே கொடுக்கப்படுகிறது. (க)

## இந்திய வம்சாவளியினர் இன்னல்களை விசாரிக்க தமிழகத்தில் விசேட குழு!

### ஐ. நா. வுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாம்

சென்னை, ஆக. 21

இந்தியா வந்துசேரும் இந்திய பிரஜாவுரிமை பெற்ற இலங்கை இந்திய வம்சாவளியினர் அண்மையில் இலங்கைக் கலவரங்களில் பாதிக்கப்பட்டது குறித்து விசாரிக்கவிசேட குழுவொன்று அமைக்கப்படவுள்ளது.

இவ்விசாரணைக்குழு தமிழகத்திலேயே அமைக்கப்படும். இரு முன்னாள் நீதிபதிகள் இதில் அங்கம் பெறுவார்கள். இந்திய வம்சாவளியினர் அனுபவித்த கஷ்டங்களை இக்குழு விசாரணை செய்யும்.

விசாரணை முடிவில் இக்குழுவின் அறிக்கை ஐ. நா. ஸ்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அத்துடன் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஐ. நா. செயலாளரை ஐ. நா. சாசனத்தில் அவருக்குள்ள அதிகாரங்களுக்கமைய இலங்கைச் சம்பவங்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி இக்குழு கேட்டுக்கொள்ளும்.

இவ்விசாரணைக் குழுவை

(5-ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சிக்கு
## அகதிகள் வருகை அதிகரிப்பு புதிதாக நான்கு முகாம்கள்!

(கிளிநொச்சி)

கொழும்பிலும் மற்றும் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்டு பெருந்தொகையானோர் அகதிகளாகத் தினமும் வந்து கொண்டிருப்பதைத் தொடர்ந்து கிளிநொச்சியில் 5 அகதிகள் முகாம்கள் அமைக்கமுடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, சமூக சேவை அத்தியட்சகர் திரு. கெங்காதரன் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, சமூக சேவைத் திணைக்கள அதிகாரி பொன். நித்தியானந்தன் ஆகியோர் நேற்று நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. ஆலோசனைக் கூட்டத்தின் முன்னர் இவர்கள் கிளிநொச்சி முகாமில் தங்கியிருக்கும் அகதிகளை நேரில் பார்வையிட்டனர்.

சென் திரேசா தேவாலயத்தில் வணபிதா பயஸ் அடிகளார் பொறுப்பில் அமைக்கப்பட்டுள்ள அகதிகள் முகாமில் சுமார் 200 அகதிகள் தங்கியுள்ளனர்.

இரண்டாவது முகாம் கிளிநொச்சிக் நெற்சந்தைப்படுத்தும் சபைக்கட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பரந்தன் கிளிநொச்சி றோட்டரி கழகத்தினர் பொறுப்பில் இம்முகாம் உள்ளது. திரு. ப. வை. ஜெயபாலன் இம் முகாமிற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## "40,000 அகதிகள் யாழ். வந்துள்ளனர்; 1000 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்"

### புனர்வாழ்வு பற்றி யாழ். அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அகதிகள் நிவாரண புனர்வாழ்வு முயற்சியில் ஈடுபடவிரும்பும் சகலரும், "அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 1983"க்கு வாரிவழங்கவேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும், அரச அதிபருமான திரு. தேவநேசன் நேசையா மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார். அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"இம்மாதத்தில் ஏறக்குறைய 40,000 அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். இவர்களுள் சுமாராக 1000 பேர் வரை யாழ் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்கியுள்ளனர். ஏனையோரில் பெரும்பாலானோர் தமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் வாழ்கின்றனர். அகதிகளாக வந்தவர்களுள் அதிகமாக எல்லோரும் கணிசமான தொகை நிதியை இழந்திருப்துடன் ஏராளமானோர் தங்கள் வருமான மூலங்களை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ இழந்துள்ளார்கள்.

"அகதிகளை வரவேற்பதிலும், அவர்கட்கு வேண்டிய அவசர உதவிகளை அளிப்பதிலும், அவர்களின் விருப்பிடங்களுக்கு செல்ல போக்குவரத்துவசதிகளை செய்து கொடுப்பதிலும், தஞ்சம்புக வசதியற்றோரை முகாம்களுக்கு அனுப்பிவைப்பதிலும் பல அரசுசார் திணைக்களங்களும் ஸ்தாபனங்களும் இன்னும் பல அரசுசார்பற்ற நிறு

(5-ம் பக்கம் பார்க்க)

A/L 1983 Sept.

இலவச விரைவு மீட்டல் வகுப்பு

கடந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக விசேட விரைவு மீட்டல் (1 மாதகால) வகுப்புக்கள் (விஞ்ஞானம், வர்த்தகம், கலை) இலவசமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

ஆரம்பம்: 23-8-1983 காலை 9-30 முதல்
பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்.

BOND INSTITUTES
(8252) JAFFNA. Phone: 24258

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

ஒரு மாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. குறைந்த கட்டணம். J. E. C. 33, Pt. Pedro Road Jaffna. 8283

C. E. I. Part I May 1984 (London Exam); city and Guilds Part II. May 1984 (London Exam) இரண்டாவது பிரிவு வகுப்புகள் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:- J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 8284

LL. B (Final) and 1st in Laws ஆரம்பம்:- 24-08-1983 காலை 9 மணி 1983 யூலையில் நடைபெற்ற பரீட்சையின் போது முடிவுற்ற பாடங்களுக்குரிய விசேட வகுப்புகள் இடம்பெறும். விரிவுரைகள் கொழும்பு பல்கலைக்கழக பகுதி நேர சட்ட விரிவுரையாளர் உட்பட அனுபவமும் தேர்ச்சியும் மிக்கவிரிவுரையாளர்களால்நடாத்தப்படும். விபரங்கட்கு: J. E. C. 33. Pt. Pedro Road JAFFNA. 8285

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் 351 கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வயித்திலிங்கம் செல்லையா கைம்பெண் செல்லம்மா என்பவரது மரண சாதனத்தினதும் எழுத்தாவணத்தினது விடயத்தில் (மரணமெய்தியவர்)

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 3725/T

செல்லையா சந்திரசேகரம் இல: 351 கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

மனுதார்

எதிராக

செல்லையா சண்முகராசா இல: 351, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனதத்துங் வழக்கு மேலே பெயர்குறிப்பிட்ட இறந்து போனவரது மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1983ம் ஆண்டு ஆவணிமாதம் 26-ம் திகதி காலை 9 மணிக்கு இந் நீதிமன்றத்திற்கு முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றத்தின் ஆணைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

1983-ம் ஆண்டு ஆடி மாதம் 28 - ம் திகதி

வரைந்தவர்
க. செ. சோமசேகரம்
மனுதாரின்
சட்டத்தரணி.

8235

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வகுப்புகள்

I.C.M.A.-Section A, Nov, 1983. மேற்படி வகுப்புகள் செப்டம்பர் 1-ம் திகதி முதல் பருத்தித்துறையிலும் தெல்லிப்பழையிலும் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கும், பதிவு செய்தலுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள். ரெம்பிள் ரீஸ், கந்தஉடையார் வீதி, புலோலி, பருத்தித்துறை--சோதிவாசா, தெல்லிப்பழை மேற்கு. 8240

## விற்பனைக்கு

புதிதாக அறுவடைசெய்த சணல் விதைகள் விற்பனைக்குண்டு. கரும்பு தோட்டம் ஸ்கந்தபுரம் கிளிநொச்சி. 8290

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியில் 4 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. உடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8289 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8289

நுணுவில் சந்தியில் சகல வசதிகளுடனுன வீட்டுடன் 5 பரப்புக் காணியும், மாங்குளம் மார்க்கட் முன்பாக இரு கடைகளும், அல்லைப்பிட்டியில் பயிர்ச் செய்கைக்குகந்த 55 பரப்புக்காணியும், அரியாலை, ஆனைக்கோட்டை, கொக்குவில், கோண்டாவில், சுண்டிக்குளி, மானிப்பாய், திருநெல்வேலி, நாவற்குளி ஆகியஇடங்களில் வீடு கட்டக்கூடிய காணித் துண்டுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு மல்ரி சேவிசஸ், த டன்லப் ஸ்ரோஸ் 234 (446) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23541. (8301)

சமையல் வேலைக்கு அனுபவமுள்ள நடுத்தர வயதுடைய பெண் வேலையாள் உடனே தேவை. தொடர்பு கொள்ளவும். இரட்சணிய சேனை இல்லம், கண்டி வீதி, கைதடி. 8303

கடையுடன் 2 பரப்புக் காணி 3 பேஸ் மின்சாரம் நல்ல தண்ணீர் வசதியுடன் கண்டி வீதி சாவகச்சேரி சந்தைக்கு மிக அண்மையில் விற்பனை அல்லது வாடகைக்கு உடன் தொடர்பு கொள்ளவும். கிரியோண் கூல்பார், நவீனசந்தை, சாவகச்சேரி. 8287

நல்ல நிலைமையிலுள்ள 250 Super Dream Honda மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி 91, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 8244

EN 7019 மொறிஸ் மைனர் (Morris Minor) கார் தனிப் பாவிப்பிலுள்ளது. சிறந்த நிலையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; கா. குணரட்ணம், 28, விபுலானந்தர் வீதி, புங்கங்குளம். 8305

## தவறிவிட்டது

18-8-83இல் சாவகச்சேரி D. R. O. கந்தோருக்கும் கோட்டிற்கும் இடையில் 11ஸ்ரீ 7598 (Toyota) காரின் இன்சூரன்ஸ் ரக்ஸ் உம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ''பரம்ஸ்'' (பஸ் நிலையம் முன்பாக) சாவகச்சேரி. 8308

## தவறிவிட்டது

எனது பெயருக்கு சவூதி அரேபியாவில் இருந்து மகனால் அனுப்பி வைக்கப்பட்ட ''காசோலை'' ஒன்று சென்ற திங்கட்கிழமையன்று பருத்தித்துறை பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தால் என்னிடம் ஒப்படைக்கவும். நன்றி அறிதலுடன் ஏற்றுக்கொள்வதுடன் சன்மானமும் வழங்கப்படும். S. V. பொன்னுத்துரை கற்கோவளம் பருத்தித்துறை 8307

## பிறந்ததின வாழ்த்து



செல்வி தர்சிக்கா

உடுப்பிட்டி சந்தை வீதி விக்கினேஸ்வரன், நிர்மலாதேவி தம்பதிகளின் புதல்வி தர்சிக்கா முதலாவது பிறந்தநாளைசிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பாவும் அம்மாவும் மாமாவும் அம்மம்மாவும் அப்பம்மாவும் மகேசுச் சித்தப்பாவும் உதயச்சித்தப்பாவும் ஜெகநாதன்சித்தப்பாவும் சித்தியும் மாமி மச்சாள் மற்றும் உறவினர்களும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள். 8315

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சென்ற் பீற்றஸ் ஒழுங்கை இல: 153/1 ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் கைம்பெண் சிவானந்தநாயகி என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சுப்பிரமணியம் திருநாவுக்கரசு, 117, அருணகிரி வீதி, திருகோணமலை,

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 566

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்,

நீதிமன்றக் கட்டளைப்படி

க. மாரிமுத்து
பதிவாளர்

1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

8298

## இன்றைய பலன்

ஆவணி 6ம் திகதி
திங்கட்கிழமை
(22—8—83)

மேடம்: அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும் முயற்ச்சியால் முன்னேற்றமுண்டு; பொருளாதாரத்துறையிலும் வாகனத்திலும் விருத்தி தென்படும்.

இடபம்: பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிக் காண முடியும். குடும்பத்தில் பிணைப்புக்கள் இறுகும் மகிழ்ச் சிகரமான தினம்.

மிதுனம்: கருடப்பார்வை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள் நண்பர் ஒருவரின் கடிதம் வேதனையைத்தரலாம்.

கடகம்; கருத்தொருமித்த காதலர்வாழ்வில் மறக்க முடியாதசம்பவங்கள் இடம் பெறலாம். எதிர்ப்புக்கள் மறைந்து சாதகமான சூழ்நிலை உருவாகும் களத்திரம் சேரும்.

சிங்கம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும்

(5-ம் பக்கம் பார்க்க)

## ST. JOHN'S COLLEGE AND CHUNDIKULI GIRL'S COLLEGE, JAFFNA.

## Admission 1984

1. Vacancies ONLY in the following Grades: St. John's College, Jaffna. Grades: ONE, SIX and NINE. Chundikuli Girls' College, Jaffna. Grades: ONE, THREE, SIX and NINE.
2. Children born between 01 — 02 — 78 and 31—01—79 only will be considered for admission to Grade-One (L.K.G) (Birth Certificate should be annexed along with the application.)
3. Pupils to be considered for admission to Grades THREE, FOUR, SIX and NINE should be below the age of nine, ten, twelve and fifteen respectively as on 31-1-1984.
4. Apply before 10th September on forms available from the respective Schools from the 1st of September 1983.
5. Please send stamped addressed long envelope and Postal Order for Rs. 20/- per form.
6. Admission Test (for Grade 3,4, 6 and 9 only) at 8-30 on Saturday 8-th Oct., 1983.
7. A passport size photograph certified by the Principal of the present School must be produced at the admission test.
8. Time-table for the admission test will be issued with the application form.
9. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.
10. Applicants will be informed of the results -no personal calls please.

Principals.

8145

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா தியாகராஜா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்.

—இறந்தவர்

கந்தையா இரத்தினசிங்கம் பெண் அன்னலெட்சுமி 408, கே. கே. எஸ். ரோட்டு, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

மரணசாதன)
நியாயாதிக்கம்)
இல. தத்துவம் / 3706

மேலேயுள்ள இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்து போனவரின் ஆதனத்தை நிர்வகிப்பதற்காக இந்நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

அக்கறையுள்ள எவரும் 1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்,

1983ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

தா. குலஞானம்,
பதிவாளர்.

டபிள்யு. எஸ்.
செந்தில்நாதன்
மனுதாரின் சட்டத்தரணி.

8280

வடமராட்சி நவயுகசிற்பிகள்

## கழகச் சீட்டிழுப்பு

23-8-83ல் தொண்டமானுறு செல்வச்சந்நிதியில் நடாத்தப்படவிருந்த சீட்டிழுப்பு தற்போதைய நிலைமை காரணமாக மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்ள்ள தென்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

T. இரத்தினம்
காரியதரிசி

21-8-83. (8314]

வருடமொன்றுக்கு உங்கள் பணத்திற்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்.
குறைந்த தொகை ரூபா 1000/-
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல்மாடி), யாழ்ப்பாணம்.
போன்: 23698

# இந்தியாவில் நீர்மூழ்கி, போர் விமான 'பட்டரிகள்' உற்பத்தி!

## பாதுகாப்புச் சாதனங்களின் தயாரிப்புகள் துரித வளர்ச்சி

புதுடில்லி, ஆக. 21 நீர்மூழ்கிக்கப்பல்கள், போர் விமானங்கள் ஆகியவற்றுக்குத் தேவைப்படும் எலக்ரோனிக் பட்டரி வகைகள் இந்தியாவில் தயாராகத்தொடங்கியுள்ளன.

இந்த பட்டரிகளை இந்திய பாதுகாப்புத்துறை ஆராய்ச்சியாளர்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளனர். பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தமது அமைச்சின் ஆலோசனைக்கமிட்டி கூட்டத்தில் இத்தகவல்களை வெளியிட்டார்.

இந்தியா தனது பாதுகாப்புத்துறைக்குத் தேவையான பொருட்களை தயாரிக்கும் பணியை 1965ம் ஆண்டில் ஆரம்பித்தது. அன்றிலிருந்து இதுவரை 57,000 பாதுகாப்புத்துறைச் சாதனங்கள் தயாராகியுள்ளன.

டாங்கிவண்டிகள், துப்பாக்கிகள், வெடிமருந்துகள், போர் விமானங்கள், போர்பயிற்சி விமானங்கள் என்பன இவற்றில் அடங்கும். (கி)

---

இலங்கைக்கு வருமுன்னர்

# எம்.ஜி.ஆர், கருணாநிதியையும் பார்த்தசாரதி சந்திப்பார்!

சென்னை, ஆக. 21 இந்தியப் பிரதமமந்திரியின் விசேட பிரதிநிதியாக இலங்கை செல்லவிருக்கும் திரு. ஜி. பார்த்தசாரதி சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

இவர்களுடன் திரு. பார்த்தசாரதி இலங்கைத் தமிழர் பிரச்னைகள் தொடர்பாக கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 25ம் திகதி வியாழக்கிழமை திரு. பார்த்தசாரதி இலங்கை செல்கிறார். அங்கு நடத்தவேண்டிய பேச்சுக்கள் பற்றிய அறிக்கையை வெளிவிவகார அமைச்சு தற்போது தயார் செய்துவருகின்றது.

இலங்கை த. வி. கூட்டணிச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் உட்பட இலங்கை விவகாரத்தில் அக்கறைகொண்டுள்ள இந்திய அரசியல்வாதிகள் பலரையும் திரு. பார்த்தசாரதி சந்தித்து உரையாடியுள்ளார். திரு. பார்த்தசாரதி இலங்கை செல்லவிருப்பதையும், அவரின் வருகையை ஜனாதிபதி ஜயவர்த்தன ஏற்றுக்கொண்டிருப்பதையும் இந்தியப் பிரதமர் கடந்த வாரம் லோக்சபாவில் தெரிவித்தார். (கி)

---

# இந்திய செஞ்சிலுவை சங்கமே கூடுதல் உதவி!

## ரூ. 1 கோடி பெறுமதியானவற்றை வழங்கியது!

(கொழும்பு)

இலங்கையில்பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய செஞ்சிலுவைச்சங்கமே கூடுதலான உதவிகளைச்செய்துள்ளதுஒருகோடி ரூபா பெறுமதியான உதவிகள் இச்சங்கத்தினால் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

இத் தகவல் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தி நிருபர்கள் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்திய உயர் ஸ்தானிகர் இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைவர் இந்தியசெஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

இதுவரை இந்தியா உட்பட சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மொத்தமாக வழங்கியுள்ள உதவிகளின் பெறுமதி இரண்டு கோடியே ஐம்பதுலட்சம்ரூபாக்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தஉதவிகளில் உணவு பண்டங்கள், உடை, மருந்து வகை, தற்காலிக இருப்பிட வசதிகள் என்பன அடங்குகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பசினைந்து நாடுகளிலுள்ள கிளைகள் இலங்கைக்கு உதவமுன்வந்துள்ளன, அம்புலன்ஸ் வண்டியொன்றும் இந்த உதவிகளில் அடங்குகின்றது. (கி)

---

# பங்கீட்டு முறையில் மண்ணெண்ணை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் பெற்ரோலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு எரிபொருள் நிலையத்திற்குக் கடந்த வாரம் டீசல் மட்டுமே பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பண்டத்தரிப்புச் சங்கம் பங்கீட்டு அட்டைக்கு தலா ஒரு லீட்டர் வீதம் மண்ணெண்ணையை விநியோகித்து வருகின்றது. விவசாயிகளுக்கு இது போதாமையால் தனியார் கடைகளில் ஒரு கலன் மண்ணெண்ணையை 50 ரூபாவீதம்அவர்கள்வாங்கிச் செல்கின்றனர். ஒரு போத்தல் பெற்ரோல் இருபது ரூபாவாக விற்கப்படுகின்றது. வேறு வழியின்றி இப்பகுதி விவசாயிகள் இந்த விலைகளுக்கு மண்எண்ணை, பெற்ரோல் ஆகியவற்றை வாங்கிச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

---

# நெடுந்தீவில் கடும் வறட்சி:

## குதிரைகள் மாடுகள் சாகின்றன

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் உள்ள குதிரைகளும், மாடுகளும் பெருந்தொகையில் இறக்கின்றன. நெடுந்தீவில் தற்போது நிலவும் வரட்சி காரணமாக குடிநீருக்கும் புல்லுக்கும் ஏற்பட்டுள்ள பஞ்சத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான குதிரைகளும் மாடுகளும் பெருமளவு இறந்து கிடப்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

நெடுந்தீவு குதிரைகளுக்குப் பிரபலமானது என்றும் அவை இத்தீவுக்கு ஒரு தனிச் சிறப்பைப் பெற்றுத்தந்துள்ளன என்றும் கூறப்படுகிறது. தனியாருக்குச் சொந்தமான இக் குதிரைகளை அரசு இவற்றை வெளி இடங்களுக்கு ஏற்ற அனுமதி வழங்குவதில்லையாம். குறிப்பிட்ட அளவு குதிரைகளை வருடாவருடம் வெளியே ஏற்றுவிட்டால் புறப்பஞ்சகாலத்தில் பெருமளவு குதிரைகள் இறந்துவிடும் என்றும் இறுதியில் குதிரைகளில் தோற்றமும் சிறிதாகிவிடுமென அஞ்சப்படுகிறது.

---

# இன்று தேர்த்திருவிழா

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. காலை ரதத்தில் வீதிவலம் வரும் விநாயகப் பெருமான் மாலை 3 மணிக்கு இருப்பிடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு புலவர் ஈழத்துச்சிவானந்தனின் சமயச்சொற்பொழிவும், இரா. திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறுகிறது.

மண்டைதீவு இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. [சு]

---

''பாதிக்கப்பட்டவர்களை

# இந்தியாவிற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவும்''

## இ. தொ. க. கிளை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

''பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளியினரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு இ. தொ. க. தலைவர் திரு. எஸ். தொண்டமானுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

வவனியா இ. தொ. க. மாநில காரியாலயத்தில் நடந்த கிராமத் தலைவர்கள் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இ. தொ. க. மாவட்டத் தலைவர் திரு. கே. பாலசிங்கம் தலைமையில் நடந்த இம்மகாநாட்டில் வடபிராந்திய பொறுப்பு அதிகாரி திரு. பி. மருதபிள்ளையும் கலந்துகொண்டனர்.

தென்னிலங்கையில் மட்டுமல்ல தமிழர் பெரும்பான்மையாக வாழும் வன்னி மாநிலத்தில்கூட வாழவிரும்பவில்லை என்றும், இந்தியா செல்ல ஏற்பாடு செய்யுமாறும், பலர் வலியுறுத்தினார்கள். (க)

---

# தீராத நோயினால் வயோதிபர் தற்கொலை

(கிளிநொச்சி)

தனக்கேற்பட்ட நோய்க்கு பல இடங்களிலும் சிகிச்சை பெற்றும் நோய் தீராததால் கவலையடைந்த 80 வயது வயோதிபரொருவர் வாழ்க்கையில் விரக்தியடைந்து நச்சுத் திராவகம்த்அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இராமநாதபுரத்தை சேர்ந்த சின்னையா செல்லத்துரை என்பவரே தற்கொலைசெய்தவராவர். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப்பகுதிமரணவிசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார்.

(5-ம் பக்கம் பார்க்க)

---

# 'பறக்கும் புலி' ஏற்படுத்திய பரபரப்பு!

(கொழும்பு)

கடந்த வாரம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ஒரு சிறு பரபரப்பு ஏற்பட்டது.

இப்பரபரப்பிற்கு 'பறக்கும் புலி' என்ற பெயருடன் விமானம் ஒன்று அங்கு தரித்து நின்றதே காரணம்.

தனியாருக்குச் சொந்தமான அவ்விமானம் கட்டுநாயக்கா விமான நிலைய ஓடுபாதையில் சற்றுத்தொலைவில் தரித்து நின்றது. அதன் வால் பகுதியில் 'பறக்கும் புலி' (பிளைங் ரைகர்) என்ற பெயர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

அப்பெயர் விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் கண்களில் படவே பரபப்படைந்த நிலையில் அதனை அவர்கள் நெருங்கினர், அதன் அருகே நின்ற அதன் சிப்பந்தியுடனும் பேச்சுக் கொடுத்தனர். அப்போது அந்நபர் 'இதுநீங்கள் கருதும் புலியல்ல. ஒரு தனியார் விமானம். விமான நிலையத்தில் இதனை இறக்கியமைக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்காகவே இது இங்கு நிறுத்தப்பட்டுள்ளது'' என்று பதிலளித்தார்.

பாதுகாப்பதிகாரிகளும் அச்சிப்பந்தியின் பதிலையடுத்து அவ்விடத்தினின்றும் மன ஆறுதலோடு அகன்றனர்! (கி)

---

# கண்டிப்பைப் பொறுக்கமுடியாது தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

கோயில் திருவிழாவிலிருந்து நேரம் சென்று வீடு திரும்பியதை சகோதரன் கண்டிக்கவே கந்தையா புஷ்பராணி என்ற இளம் மங்கை கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் குப்பிளான் கற்கரைப்பிள்ளையார் கோயில் பகுதியில் இடம்பெற்றது. கோயில் திருவிழாவிலிருந்து நேரம் சென்று இரவு 11 மணியளவில் கந்தையா புஷ்பராணி வீடு திரும்பினாராம். இதனைக் கண்டித்து அவரது சகோதரர் அவரை அடித்தாராம்.

சகோதரரின் இக்கண்டிப்பை பொறுக்கமுடியாதபுஷ்பராணி கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. சுன்னாகம்பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (கி)

---


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## தூரஇட பஸ் சேவைகள் ஆரம்பம்

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் இருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பமாகின. பருத்தித்துறையில் இருந்து திருகோணமலைக்கு நடாத்தப்பட்ட சேவைக்காக வவனியாவுக்கு புதிய சேவை ஒன்று ஆரம்பமாகியுள்ளது.

## தொழில் நுட்ப பரீட்சையை பின்போடுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த 18ம் திகதி நடைபெறவிருந்த இறுதிப் பரீட்சைக்கு மாணவர்கள் எவரும் தோற்றவில்லை.

மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மாணவர்களுக்குக் கிடைக்க வில்லை என்பதே முக்கிய காரணமெனத் தெரிவிக்கப்பட்டது.

இது விடயமாக யாழ். பல் தொழில்நுட்ப நிறுவன தொழிற்றுறை மாணவர் மன்றம் பரீட்சையைப் பின்போடுமாறு அதிபர், ஜனதிபதி உயர் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. (மா-து)

## தட்டுப்பாடு இல்லை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொது மக்களுக்கு எவ்விதத் தட்டுப்பாடும் ஏற்படாதவாறு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றது. தற்போதைய நிலையில் தனியார் வர்த்தகர்களினுல் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் நிகழாதவாறு சங்கம் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சீனி, மண்ணெண்ணை, மா ஆகியவற்றின் விநியோகத்தை மேற்கொண்டு வருவதாக சங்கத் தலைவர் திரு. வி. சேனதிராஜா தெரிவித்தார். (அ)

# 5-ம் தர புலமைப் பரீட்சை 3-ம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர் உதவிப்பணம் வழங்குவதற்குமான ஐந்தாந்தரப் பரீட்சை 1983. ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சை 1983. அடுத்தமாதம் மூன்றும் திகதி நடைபெறுமெனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அண்மையில் நடந்த கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு, யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர்ந்து வந்திருக்கும் பரீட்சார்த்திகள், யாழ்ப்பாணப் பரீட்சை நிலையங்களில், இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக, ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பரீட்சார்த்திகள் தங்கள் விபரங்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பி, 25-8-83-க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக, திரு. வெ, சபாநாயகம் பிரதம கல்வியதிகாரி, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். என்றமுகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

### மாதிரிப் படிவம் (ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை 1983)

1. பரீட்சார்த்தியின் பெயர்:—..............................................
2. பரீட்சார்த்தியின் தந்தை பெயர்:—..............................................
3. தற்போதைய வதிவிட விலாசம்:—..............................................

..............................................................................................

4. பரீட்சார்த்தி. படித்த பாடசாலைப் பெயரும், விலாசமும்:—..............................

..............................................................................................

5. பிறந்த திகதி;—........................
6. பால்:—............................
7. பரீட்சார்த்தியின் கையொப்பம்;—......................

மேலே கொடுக்கப்பட்ட விபரங்கள் முற்றிலும் சரியானவையென்றும், குறிப்பிட்ட பரீட்சார்த்தி, இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக, *முன்னர் படித்த பாடசாலை மூலம் விண்ணப்பித்தார் என்றும், இதில் தரப்பட்டுள்ள பரீட்சார்தியின் கையொப்பம், குறித்த பரீட்சார்த்தியால் என்முன்னிலையில் இடப்பட்டதென்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

.................... ..............................

திகதி பெற்ருேர் கையொப்பம்

(★ குறிப்பு: மேற்படி படிவத்தையும் நிரப்பி பிரதம கல்வி அதிகாரிக்கு அனுப்பலாம்)

## மகள் அருந்திய நஞ்சை உண்டு தாயும் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கிருமிநாசினி அருந்தி மகள் உயிரைப் போக்கிக் கொண்டதைப் பொறுக்காத தாய் தாமும் மகள் அருந்திய கிருமிநாசினியை அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இப்பரிதாப சம்பவம் ஏழாலைப்பகுதியில் இடம் பெற்றது. ரத்னம் சித்ராதேவி என்ற இளம் பெண் (20 வயது) தாய் புல்லு பெட்டி வருமாறு பணித்தபோது செவிசாய்க்காது. இருந்தராம் இதனைத் தொடர்ந்து தாயர் கண்டிக்கவே வீட்டிலிருந்த கிருமிநாசினியை அருந்தி சித்ராதேவி தற்கொலை செய்து கொண்டார்.

மகள் நஞ்சருந்தி இறந்ததை அறிந்த தாயாரான ரத்னம் பர்வதம் (52) தாமும் மகள் அருந்திய கிருமிநாசினியை அருந்தி தற்கொலைசெய்து கொண்டார். மகள் ஸ்தலத்திலேயே இறந்தார். ஆனுல் தாயார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்தார்.

மரணவிசாரணைகளில் இந்த இரு மரணங்களும் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. சுன்னுகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். (கி)

## இலவச பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் கொடியேற்றத் திருவிழாவை முன்னிட்டு அருணகிரிநாத சுவாமிகளின் 'திருஎழு கூற்றிருக்கை' என்ற பிரசுரத்தை 'மில்க் வைற்' நிறுவனம் வெளியிட்டு இலவசமாக விநியோகிக்கின்றது. இதனைத்தபாலில் பெற விரும்புபவர்கள் 50 சத முத்திரை பதித்ததபாலுறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுமாம்.


SHABRA UNICO FINANCE LTD.

(An approved finance company by Monetary Board of Central Bank)

61, New Bullers Road, Colombo-4. Tel: 589310

எம்மிடம் நிலையான வைப்பில் உங்கள் பணத்தை இடுவதன் மூலம் நீங்களும் எமது நிறுவனத்தில் பங்குதாரராகுங்கள். கம்பனிப் பங்குகளைப்போன்று சந்தையில் ஏற்படும் மாற்றங்களாலும் அரசியல் மாற்றங்களாலும் உங்கள் முதலீடுகள் பாதிக்கப்படுவதில்லை.

உங்கள் பணம் ஷப்ருவில் பத்திரமாக இருப்பதுமட்டும் அன்றி மாதம்தோறும் அதி உயர் வட்டியையும் நீங்கள் பெறலாம்.

ரி. வி., குளிர்சாதனப்பெட்டி, தட்டச்சு, தையல் இயந்திரம், மின்விசிறி, துவிச்சக்கரவண்டி, மோட்டார் சயிக்கிள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்களிற்கும் 60% நிதி உதவி வழங்கப்படும்.

இது சம்பந்தமான விபரங்களை நேரில் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்

உழைக்கும்போதே சேமிக்கும் திட்டம்.

மாதாந்தம்—36 மாத கால முடிவில்

100/-.................... 4,727.60
200/-.................... 9,455.19
300/-....................14,182.79
400/-....................18,910.38
500/-....................23,637.98

மேலும்
★ புதிய தொழிலை ஆரம்பிப்பவர்கட்கு ஆலோசனை வழங்கல்.
★ வேண்டிய மூலப்பொருட்கள் இயந்திரங்கள் இறக்குமதி செய்வதற்கு உதவி.
★ உங்கள் புதிய நிறுவனத்தை நிறுவுவதற்கு பொருத்தமான இடத்தில் காணி வசதி என்பன செய்து தரப்படும்,

நம்பிக்கை! நாணயம்!! நன்மதிப்பு!!! பாதுகாப்பு!!!! அனுபவம்!!!!!

தனிப்பட்ட முறையிலும் கூட்டு கூட்டுறவு முயற்சியிலும் தொழிலை ஆரம்பிப்பவர்கட்கு முதலீட்டு உதவி.

"ஷப்ரு" யூனிகோ (f)பினுன்ஸ் லிமிட்டெட்,
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்,
தொ. பே. இல: 22073.

## இந்திய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பது பற்றிய கூட்டம் நேற்று சென்னையில்நடைபெற்றது. மனித உரிமைகள் பாதுகாப்புச் சங்கத்தின் தமிழ் நாட்டுக்கிளை இதனை ஒழுங்கு செய்திருந்தது. முன்னுள் அமைச்சர் திரு. பக்தவத்சலம் உட்பட பல பிரமுகர்கள் இந்த கூட்டத்தில் பங்குபற்றினர். (கி)


**ராணி** (யாழ். நகர்)
10-30, 2-30
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**சாந்தி** யாழ்.நகர்
காலை 10-30, 2-30 6-30
ஜெய்சங்கர் -ராஜசுலோசனு
**துணிவே துணை**
கலர் - புதியபிரதி

**லிடோ** (யாழ்.நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
YOU LIVE ONLY TWICE
(Colour - Scope)

**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
சாதா-
ராஜீவ் **துணை**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**றீகல்**
10-30, 2-00, 4-30
**GIRL FROM INDIA**

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00
சிவாஜி - விஜயா
**ராமன் எத்தனை ராமனடி**

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
சிவாஜி — விஜயா
**விஸ்வரூபம்**
(கலர்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமார், ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)


## சாரணருக்கு பாராட்டு

(கரவெட்டி)

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு கொழும்பிலிருந்து காங்கேசன்துறைமுகத்துக்கு கப்பல் வந்த அகதிகளுக்கு காங்கேசன் துறைமுகத்திலிருந்து மூலம்நடேஸ்வராக் கல்லூரி வரைஉதவிப்பணிகளை மேற்கொண்ட காங்கேசன்துறை மாவட்ட சாரணர்களுக்கு வடபிரதேச சாரணர் வெளிக்கள ஆணையாளர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இப்பணியினை காங்கேசன்துறை மாவட்ட சாரண ஆணையாளர் ஆர். விஸ்வநாதன் தலைமையில் உதவிச் சாரண ஆணையாளர்கள் என்.போஜன் எஸ். சௌந்தரநாயகம் ஆகியோர் முன்னிலையில் இம் மாவட்ட கடல் சாரணர்களும் தரைச் சாரணர்களும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## தீராத நோயினுல்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மரணமான வயோதிபர் செல்லத்துரை தொய்வு நோய்க்கு ஆளாகியிருந்தார் எனவும் பல இடங்களிலும் வைத்தியம்செய்தும் பலன் ஏற்படாததால் கவலையடைந்து கிருமிநாசினியை அருந்தி மரணமானுர் எனவும் சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

மரணமானவரின் மனைவி சி. இராசம்மாவும் சாட்சியமளித்ததை தொடர்ந்து தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி திர்ப்பு வழங்கினுர். (க)

## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்த்ததில் ஏமாற்றம் தென்படும் உடன் பிறந்தவர்களாலேயே தொல்லைகள் தோன்றக்கூடும் நிதானம் வேண்டும்.

கன்னி: தன்மான மிகுதிக்கும் தனவரவிற்கும் இடமுண்டு குடும்பத்தில் தென்றல் வீசும் கல்வியில் முன்னேற்றம் காணப்படும் பிதாவழிச் சுகமுண்டு இறைநம்பிக்கை வேண்டும்.

துலாம்: உத்தியோக உயர்வுக்கு வழிகோலப்படும் பெரியவர்களின் ஆசிக்கு இடமுண்டு போட்டாபோட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும் வரவேற்பு உண்டு.

விருச்சம்; இலாபகரமான தினம் வணிகர்களுக்கு வியாபாரவிருத்தியுண்டு. நீண்ட நாள் எதிர்பார்த்த அரியசந்தர்ப்பம் இன்று கிடைக்கக்கூடும் புத்திரர் புகளுண்டு.

தனு: ஆணவப் போக்கினுல் அடிசறுக்க நேரிடும் வயது முதிர்ந்த ஒருபெண் மூலம் அவப்பெயருக்கும் இடமுண்டு சுகாதாரத்தையும் பேணி நடக்கவும்.

மகரம்: சுற்றுவட்டத்தில் சூழ்ச்சிகள் உருவாகும் நண்பர்கள் கூட்டம் சிக்கலை ஏற்படுத்தும் இளமை நினைவுகள் நின்மதியைக் குலைக்கும் மதுமானத்தைத் தவிர்க்கவும்.

கும்பம்: தொழில்துறையில் முதலீட்டை விட்டுச் செய்யின் அதிகலாபம் அடைய இடமுண்டு சகோதரத்தின் நல்வழிப்பாதையில் உம்மையும் அழைத்துச் செல்வர்.

மீனம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் வேண்டாத நடவடிக்கையின் மூலம் உறவினர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடும் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

## புதிய சமாதான நீதவான்

(கிளிநொசசி)

கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்த ஆ. நடராசா கிளிநொச்சி நீதிபரிபாலன எல்லைக்குட்பட்ட சமாதான நீதவாளுக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிளிநொச்சி நீதவான் கே. கதிரவேற்பிள்ளை முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். ஜெயந்தி நகர் கிராமமுன்னேற்றச் சங்க தலைவராகவும், மீனுட்சி அம்மன் ஆலய பரிபாலகராகவும் இவர் பணிபுரிந்து வருகிறுர். (க)

## ஸ்ரீ மகா கணபதி ஆலய தேர் உற்சவம் இன்று

(கோண்டாவில்)

கோண்டாவில்- மேற்கு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில் தேர் உற்சவம் இன்று நடைபெறுகிறது.

நாட்டு நிலைவரத்தைக் கருத்திற்கொண்டு உற்சவகாலத்தில் திருவிழாக்கள் கோவில் உள் வீதியிலேயே நடைபெற்றபோதிலும் தேர் உற்சவம் இன்று வெளிவீதியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

## 40,000 அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வனங்களும், தனியார்சேவை மன்றங்களும் ஒன்றிணைந்து ஈடுபட்டுள்ளன. பலர் அகதிகள் முகாம்களை பொறுப்பேற்று நடத்துவதிலும் ஆங்கு சேவையில் ஈடுபடுவதிலும் ஆர்வம் காட்டுகின்ற அதேவேளையில் அகதிகளாக தனியார் வீடுகளில் இருந்து உதவிதேவைப்படுவோருக்கும் உதவியை ஏற்படுத்துவதிலும் முற்பட்டுள்ளனர்.

எண்ணுக்கணக்கற்ற ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் அகதிகளுக்கென பணம், உணவு, உடை வேறும்பொருட்களை சேகரிக்க முனைந்துள்ளனர் என அறியக்கிடக்கிறது. இவர்களுட் பலர் உண்மையாகவே நிவாரண புனர்வாழ்வுக்கான திட்டங்களில் ஈடுபட்டிருக்கும் அதேவேளையில் சிலர் அகதிகளின்பேரில் தங்கள் சொந்த நலனுக்காக பொருட்களை சேகரிப்பதாகவும் இன்னும் சிலர் நன்னேக்கோடு செயற்பட்டாலும் பயன்தரக்கூடிய ஆக்கபூர்வ திட்டங்கள் இல்லாதவர்களாகவே காணப்படுகிறது. இப்படியான நிறுவனங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அளிக்கப்படும் கொடைகள் வீணே விரயமாக்கப்பட்டவையாகவும் பிரதிபலன் அளிக்காத நன்கொடைகளாகவும் இருக்கும்.

யாழ் மாவட்டத்தில் சேர்க்கப்படக்கூடிய நிதி வளத்தை பெருமளவாக பெறவும் சேர்க்கப்பட்ட பணத்தில் இருந்து மிகக்கூடிய பயன் பெறுவதை நிச்சயப்படுத்தவும் ''அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983'' என்னும் பெயரில் அரசாங்க சார்பு அற்ற ஒரு ஸ்தாபனத்தை நான் ஸ்தாபித்துவைத்துள்ளேன். இதற்கு வைத்தியகலாநிதி யோகுபசுபதி தலைவராகவும் இளைப்பாறிய நீதிபதி திரு. கே. வி. நவரட்ணம் செயலாளராகவும் இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெ. எம். சபாரட்ணம் பொருளாளராகவும் உள்ளனர். இந்நிதியத்தின் முகாமுச்சபை பல ஆக்கபூர்வ புனர்வாழ்வுத் திட்டங்களை தயாரிக்க பலர் உதவிபுரிகின்றனர். யாழ் மாவட்டத்தில் நிவாரண புனர்வாழ்வு முயற்சியில் ஈடுபடவிரும்பும் சகலரையும் இந்நிதியத்திற்கு வாரி வழங்கவேண்டுமென நான் வேண்டுகின்றேன். (மா)

## நாளை ரதோற்சவம்

(வேலணை)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலின் ரதோற்சவம் நாளை செவ்வாய்கிழமை காலை நடைபெற இருக்கின்றது. நாளை மாலை தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனத்துடன் உற்சவம் முடிவடையவிருக்கின்றது.

## கரவெட்டி வேலைகள் பரு. தபாலகத்தில்

[கரவெட்டி]

மூடப்பட்டுள்ள கரவெட்டி தபால் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் தற்பொழுது பருத்தித்துறை தபால் அலுவலகத்தில் கடமையாற்றுகின்றனர்.


**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**

யாழ். புடவை வியாபாரிகளுக்கு
ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னுதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடைஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்குண்டு.

I. ✯ சாயமூட்டிய பொப்பிளின்
II. ✯ வெள்ளை பொப்பிளின்
III. ✯ பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 24310)

தலைமைக் காரியாலயம்:
**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
463, காலி வீதி, கொழும்பு-3.


## பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மாவட்ட நீதிமன்றம் மல்லாகம்

வழக்கு இல. MS / 1290

(1) சுப்பர் மயில்வாகனம், பெண்
(2) தங்கம்மா.
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
-வழக்காளிகள்

எதிராக

இராமநாதர் இரத்தினசிங்கம் கைம்பெண் செல்லம்மா, செட்டியகுறிச்சி பனிப்புலம், பண்டத்தரிப்பு. -எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் காசு / 1290 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படிபின்னுல் விபரிக்கப்படும் காணியை 1983ம் ஆண்டு புரட்டாதி மீ 15ம் திகதி (15-9-83) வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 4830/-தையும் 24-6-1976 துவக்கம் ரூபா 3000/-க்கு 12% வீத வட்டியும். (29-9-1976 வரையும்) பின் இருதொகையும் கூட்டிவரும் தொகைக்கு 9% வீத வட்டியும் (பணம் முழுவதும் இறுக்கப்படும் வரையும்). வழக்குச்செலவு பின்னர் அறிவிக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோயிற்பற்று சுழிபுரம் இறை ''சலாம்பியடி'' நில. பர. இரண்டரையும் (நி. ப. 2½) கிணறும் செய்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு. சின்னப்பு கனகசபையின் ஆதனம். வடக்கு சின்னையா நடராசாவின் ஆதனம். மேற்கு சிவராசாவின் மனைவியின் ஆதனம். தெற்கு ஒழுங்கையும் இன்னும் இக்காணிக்குள் இருக்கும் கிணற்றில் மேற்கெல்லைக் காணிக்குரிய பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் புற நீங்கலாக மிகுதியடங்கலும்.

**ஆழ்வார் சிவபாதசுந்தரம்,**
பிஸ்கால்,
மாவட்டமன்று, மல்லாகம்.

8286 19-8-83.




### மணிவாக்கு

இரத்தத்திலே பலம், நரம்புகளில் வலிவு, இரும்பு போன்ற தசைநார்கள், எஃகையொத்த நரம்புகள்- இவையே நமக்கு வேண்டும். தளர்ச்சிதரும் கசிவுள்ள கொள்கைகள் நமக்குத் தேவையில்லை.

—சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## சந்தைச் சமுதாயத்துக்கு ஒரு சவுக்கடி

யானை பார்த்த குருடர்களின் கதையை வகுப்புக்குச் சொன்ன ஆசிரியை, ஒருவர் அது ஒரு மரம் போன்றது; மற்றவர் சுவரென்றும் மூன்றும் ஆள் அது ஒரு கயிறுபோலென்றும் சொன்னூர்கள். இவர்கள் எத்தகைய மனிதர் என்று நினைக்கிறீர்கள்? என்று வகுப்பை வினவினுர்.

ஒரு கெட்டியான மாணவன் ''அவர்கள் நிபுணர்கள்''மிஸ்'' என்றுனும்,

இன்று நாட்டைக் கலக்கிய கலவரத்தை ஆராய்வது இத்தகைய நிபுணரின் பொறுப்பென்றுல் இதன் விளைவென்ன என்பது சொல்லாமலே விளங்கும்.

''எங்கள் நிபுணத்துவம் எங்கள் அழிவுக்கு சவால்விடுகின்றது; தொழில் நுட்ப விஞ்ஞானத்தில் நாம் தெய்வங்கள்; உலக வாழ்வில் நாம் மந்திகள்'' என்று சொன்னுர் வரலாற்று மேதை ஆர்னல்ட்டயின்பீ (Arnold Toynbee)

முப்பதுகோடி பெறுமதியான கொள்ளையடிக்கப் பட்ட பொருள்கள் பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன. எனவே மொத்தத் தொகை இதைவிடப் மிக பெரியதாகும்.

இந்த நவீன மயப்பட்ட சமுதாயத்தில் இந்தப் பொருள்கள் என்ன என்ற பட்டியல் எல்லோருக்கும் தெரியும். எரிக்கப்பட்டவை, உயிரிழந்தோர் ஒரு புறமிருக்க இவ்விதகொள்ளை நடந்தது. இது ஒரு இனக் கலவரம் மட்டுமல்ல; ஒரு சமுதாய வாழ்வின் அழிவையே குறிக்கின்றது.

சருகு போல் காய்ந்திருக்கும் ஒருவிசாலமான புற்றரையில் காற்றும் வாய்ப்பாய் இருந்தால் ஒருசிறு தீப்பொறி அந்த நிலப் பரப்பை இடந்தெரியாது அழித்து விடும்.

இனக்குரோதம் இப் பெருந்தீக்கு அத்திவாரமிட்டபோதும் அழிந்தது ஒருவிதச்சமுதாய வாழ்வு ஹிட்லரை அடக்க வேண்டுமென்றெழுந்த பிரிட்டன் இந்தியாவுக்கு சுதந்திரமளிக்க நேரிட்டகதை இன்று எவருக்கும் தெரியும்.

அதேபோல இன்று இந் நாட்டை கெடுத்துவரும் சந்தைச்சமுதாயம் நல்லடி வேண்டியிருப்பதை நாம் உணர முடியுமானுல் தமிழ் மக்கள் பிரச்னை மட்டுமல்ல, நாட்டின் சமுதாய சீர்கெடுகள் பல ஒழிவதற்கு வழிபிறக்கும்.

மனிதன் மனிதனுக வாழ உதவாத நாகரிகம் தமிழன் தமிழனுகவாழ எவ்வாறு உதவும்!

அபிவிருத்தியென்றுல், பொருள்உற்பத்தி உற்பத்திக்கு மூலப்பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு சந்தை; இவ்விரண்டுமே இன்றைய நாகரிக வாழ்வை வழி நடத்துகின்றன..

பூரண வாழ்வின் மற்றைய அம்சங்கள் எல்லாம் இந்தச் சந்தை சமுதாயத்துக்குப் பக்கவாத்தியங்களே: கல்விதானும்.

கொழும்பை மையமாகக் கொண்ட சமூகவாழ்வு இவ்வித அபாயத்துக்கு என்றும் ஆளாகும். தன் குடும்பத்தை உற்றுரை நண்பரை மறந்து தன் சமுதாய பண்புகளான கருணை பணிவு சகிப்புத்தன்மை போன்ற நற்குணங்களுக்கு இடமளிக்காத நாகரிகம் சந்தை நாகரிகம்.

தொழில்நுட்ப விஞ்ஞானத்தால் உலகில் மிக முன்னேற்றமடைந்த நாடுகளில் அமைதி, சமாதானவாழ்வு, பாதுகாப்பு குன்றியிருப்பதை நாம் காண்கின்றேம்.

சமய மரபில் வேரூன்றிய எமது பண்பாடு, சந்தை நாகரிகத்தின் பிடியில் சிக்குண்டு மூலவேரிழக்கும் நெருக்கடியை அண்டி நிற்கின்றது.

விரக்தியடைந்த ஆசிரியர் ஒருவர் தமது ராஜினுமாக் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார். எங்கள் பெருமை வாய்ந்த கல்லூரிகளில் ஆசிரியர் அதிபருக்குப் பயம், அதிபர், கல்வி அதிபதிக்குப் பயம், அதிபதி அமைச்சருக்குப்பயம், அமைச்சர் பெற்றேருக்குப்பயம், பெற்றேர் பிள்ளைகளுக்குப் பயம்; பிள்ளைகள் எவருக்கும் பயமில்லை.''

இன்றைய நாகரிக வாழ்வின் வீழ்ச்சியை சொல்லாமற் சொல்லும் கடிதம் இது.

## சந்நிதியானே போற்றி

இந்தூருஞ் செஞ்சடையான் இளையாய் போற்றி
இருவினைகள் கெடவருளும் இனியாய் போற்றி
சிந்தூரூந் திருவடியாய் சேயே போற்றி
சினவசுரன் றனையாண்ட தீரா போற்றி
நந்தூரும் அலைவாயில் நாதா போற்றி
நறுங்கடம்பத் தார்சூடும் நயனே போற்றி
செந்தூரம் மானேயெஞ் சேந்தா போற்றி
செல்வச்சந் நிதியானே போற்றி போற்றி.

—ச. தங்கமாமயிலோன்

### ✯ இன்று நல்லைக்கந்தன் மஞ்சத்திருவிழா

# நல்லூர்க்கந்தனின் நல்லருள் பெறுவோம்

கலி தீர்க்கும் கலியுகப் பெருமான் குறிஞ்சிக் கடவுள். குறிஞ்சி நிலத்தில் வாழுகின்ற வேடர்கள், கொடிய விலங்குகளாலும் ஆறலைகள்வர்களாலும் தமக்கு இடர் ஏற்படாதவாறு முருகப்பெருமானை வணங்கிவந்தமையால், அஞ்சா நெஞ்சுடன் கொடிய காடுகளில் வேட்டையாடிப் பயங்கரக் குகைகளில் வாழ்ந்தனர். வேடர்களின் நல்வாழ்விற்கு அவர்களின் முருக நம்பிக்கையே காரணமாகும்.

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர், நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே என்று சிவனுடன் வாதாடிய நக்கீரர், தனக்குச் சிவனுல் ஏற்பட்ட சாபத்தைப் போக்க முருகப்பெருமானை நினைந்து தல யாத்திரை செய்தபோது, ஒருநாள் ஓர் குளக்கரையில் இருந்து தவம்செய்தார். அப்போது மரத்தில் இருந்து ஓர் இலை தண்ணீரில் விழுந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கண்விழித்தார். என்ன ஆச்சரியம் பாதிஇலை மீனுகமாறியது பாதி இலை பறவையாக மாறியது. பறவை மீனைப் பிடித்து இழுத்தது. இதனைக் கண்ட நக்கீரர் சிரித்துவிட்டார். தவ நெறியிலும் ஒழுக்க நெறியிலும் தவறுவோரைத் தெய்வம் தண்டிப்பது இயல்பல்லவா! அதுபோல நக்கீரரைப்பூதம் ஒன்று இழுத்துக்கொண்டு போய்க்குகைக்குள் தள்ளியது. ஏலவே 999 முனிவர்கள் அப் பூதத்தால் சிறைபட்டு இருந்தனர். ''நக்கீரருடன் ஆயிரம் பேராகக் கூடிவிட்டனர். இனி அத்தனை பேரும் பூதம் விழுங்க வேண்டியது''என்று மற்றைய முனிவர்கள் கூறி நக்கீரரைத் திட்டினர். நக்கீரர் முருகப் பெருமானை நினைந்து திருமுருகாற்றுப்படை பாடினுர் முருகப் பெருமான் தோன்றி நக்கீரனின் வேண்டுகோளின்படி அப்பூதத்தைஉதைத்து கொன்ரூர். இதுபோன்று பல இடங்களில் தனது பக்தரின் அல்லல்களையும் துயர்களையும் நீக்கிய முருகப் பெருமானின் தோற்றமே தேவர்களைக் காப்பாற்றவும் அசுரர்களை அழிக்கவும் ஆகும்.

ஞான பண்டிதனுகிய முருகப் பெருமானை முக்கரணமும் சுத்தியடைய முப்போதும் வலம்வந்து தொழுதால் எப்போதும் தீவினைகள் தீண்டாது நல்லூர் முருகப்பெருமான்

**புலவர் சி. விசாலாட்சி**

தன்தேரடியிலே வந்து போகம் வேண்டித் துதிப்பார்க்கும் போகத்தையும், யோகம்வேண்டித்துதிப்பார்க்கு யோகத்தையும், ஞானம்வேண்டித் துதிப்பார்க்கு ஞானத்தையும் அருள் செய்வான்.

தமிழரின் குலதெய்வமாகிய நல்லூர்க் கந்தனை முழுமனதோடு முப்போதும் முருகா முருகாவென்று துதிப்பதற்காகவும் துதிக்கச் செய்வதற்காகவும் சப்த தீவுகளும் முருகவழிபாட்டில் ஈடுபடுகின்றனர். முருகப்பெருமானை நெஞ்சிலே நிலையாக எண்ணுவோரே அஞ்சா நெஞ்சுடையவர். முருகப் பெருமானின் தாரக மந்திரம் 'ஓம் சரவணபவாயநம.' என்ற மந்திரமாகும். இம்மந்திரம் மொழிக்குத் துணையானது. வழிக்கும் விழிக்கும் துணையான முன்புசெய்த பழி துடைக்கத் துணையானது. இனிமேல் விளைகின்ற தீவினைகளைநீக்கத் துணையாக இருக்கின்றது.

முருகவழிபாடுசெயலில் செயற்படச் சில நற்காரியங்களைத் துணையாகச்செய்தல்வேண்டும். தன்னைப்போல மன்னுயிரையும் போற்றவேண்டும், ஜீவ கருணியத்தைச் சாதிக்கவேண்டும், பொருள் நிலையில்லாதது என்றுணர்ந்து அப்பொருளால் நற்புண்ணியங்கள் செய்து அவற்றின் பயன்களை படைகளாகக்கொண்டால் உயிரைக் கவரும் கூற்றுவனே நெருங்க அஞ்சுவானென்றுல் பிறர் எபவாறு நெருங்கிப் பகைப்வ்ர் எனவே நல்லூர்ப்பெருமானை வணங்கி கலிநீக்கிக் கருணையோடு வாழ்வோமாக.

## முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும்

புதுடில்லி, ஆக. 21

இந்தியாவிலுள்ள மருத்துவக்கல்லூரிகளில் சேரவிரும்பும் வெளிநாட்டு மாணவர்கள் இந்திய மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியை முன்கூட்டியேபெறவேண்டும்என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்திய மருத்துவ கல்லூரிகளில் வெளிநாட்டு மாணவர்களின் அனுமதி தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி நிலையைக் குறைக்கும் வகையிலேயே மத்திய அரசு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை சகல மாநிலங்களிலுமுள்ள மருத்துவப்பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியனவற்றுக்கும் மத்திய அரசு அனுப்பிவைத்துள்ளது. (கி)

## பயஸ் அடிகளார் வேண்டுகோள்

[சுண்டிக்குளி]

யாழ்-மேற்றிராசன மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனரும், கிளிநொச்சி பங்குத் தந்தையுமான வண. பிதா எம். ஈ. பயஸ் அடிகள் விடுத்த அறிக்கையில் ''யாழ்ப்பாணம் வரும் அகதிகளுக்கு உணவு உடை கொடுத்து உபசரித்து வீடுகளுக்கு அனுப்பும் பணியில் ஈடுபடும் ஏனைய நிறுவனங்களுடன் நமது தொண்டரும் பணிபுரிகின்றனர். அகதிகளுக்கு இயன்ற உதவிகளை அரச அதிபரின் காங்கேசன் துறை முகாமிற்கோ அல்லது தமது அலுவலகத்துக்கு அனுப்புமாறும் வேண்டியுள்ளார்,

மேலும் அவ்வறிக்கையில் மலையகத் தமிழர் வருகை தோன்ருவிடினும் தேவையேற்படும்போது முகாம் திறக்க ஆயத்தமாயிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (க)

## மக்கள் கருத்து

### தெளிவற்றநிலை

கொழும்பிலுள்ள தனியார் ஸ்தாபனங்களில் கடமையாற்றி தற்போது அகதிகளாகி யாழ்ப்பாணம் வந்துள்ள ஊழியர்களின் நிலை என்ன என்பது இப்போது தெளிவற்றதாக இருக்கிறது.

இத்தகைய ஸ்தாபனங்களில் கடமையாற்றி வேலையிழந்துள்ள தென்னிலங்கையிலிருக்கும் ஊழியர்களுக்கு மாதச் சம்பளத்தை வழங்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கும் அதே வேளையில் இவர்களது நிலை தெளிவற்றதாக இருப்பது இங்குவேலையிழந்து வீடுவாசல்களை இழந்துவந்துள்ளவர்களுக்கு மிக்ககவலையளிப்பதாகவுள்ளது.

இது குறித்து தெளிவான விளக்கம் ஒன்றை அவர்கள் அறிந்து கொள்வதில் மிக்க ஆவல் கொண்டுள்ளார்கள்.

யாழ். அகதி.

## குருஅபிஷேகஆராதனை

(யாழ்ப்பாணம்)

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீன உதவிக் குருக்களககக் கடமையாற்றும் அராலி மூளாய் சபையைச் சேர்ந்த அருள்திரு எஸ். சி. வி. என். ஆனல்ட், அளவெட்டி, சண்டிலிப்பாய் சபையைச் சேர்ந்த அருள்திரு வி. என். தருமகுலசிங்கம் ஆகியோருக்கு குரு அபிஷேக ஆராதனை வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் நாளை காலை அத்தியட்சகர் டி. ஜே. அம்பலவாணரினுல் நடத்தப்படும்.

## அகதிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். ஸ்ரீ பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இப்பணத்தில் ஒருபகுதி கப்பல்மூலம் காங்கேசன்துறையில் வந்திறங்கிய அகதிகளுக்கு குளிர்பானம் வழங்க உபயோகிக்கப்பட்டது. மிகுதியாகவுள்ள ரூபா 3442-10 சதத்தை அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் பொருளாளர் திரு. ஜே. எம். சபாரத்தினத்திற்கு காசோலை மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நிதியத்திற்காக பணம் இன்னமும் வந்துகொண்டிருக்கின்றது. அவற்றிற்கான பற்றுச்சீட்டுக்களை சங்கம் வழங்கி வருகின்றது. இனிமேல்சேரும் பணத்தையும் அகதிகள் புனர்வாழ்வு நிதியத்திற்கு அனுப்பி வைப்போம். (மா)

## கிளிநொச்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாக உள்ளார். இம் முகாமில் சுமார் 300 அகதிகள் தங்கியுள்ளனர்.

மூன்றுவது முகாம் கனகாம்பிகை குளத்தில் அமைக்கப் பட்டுள்ளது. இளம் பறவைகள் விளையாட்டு கழகத்தினர் இம்முகாமை பொறுப்பேற்றுள்ளனர். இம்முகாமில் சுமார் 150 அகதிகள் தங்கியுள்ளனர். திரு. மு. ஞானராசா இம்முகாமிற்கு பொறுப்பாக உள்ளார்.

கிளிநொச்சி வை. எம். சி. ஏ. யிலும் ஒரு அகதிகள் முகாமும் மற்றெரு இடத்தில் ஒருமுகாமும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தொண்டர் இயக்கத்தினரும் சேவையாற்றிவருகின்றனர்.

'ரெட்பாஞ' நிறுவனத்தினர் நேற்று அகதிகள் முகாமிற்கு வந்து பார்யைிவட்டு சென்றுள்ளனர்.

5 முகாம்களுக்கும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சுப்பிரமணியம் பொறுப்பாக இருப்பார் சமுக சேவை அதிகாரி பொன் நித்தியானந்தன் பராமரிப்பாளராக பணியாற்றுவார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்22-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.